**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. No. 141/2019**

**Prosecution witness : ம.சா.1** **Date : 21.12.2023**

| | |
|---|---|
| Name : ராமமூர்த்தி | Caste : MBC |
| Father Name: ரங்கசாமி | Calling : சுயதொழில் |
| Village : பெரியார் நகர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 61 |

**(Complainant and Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். நான் வாகனம் வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் எண்கள் TN 42 M 2523 , ஆட்டோ எண் TN 29 AH 8402. என் பெயரில் வாகனங்கள் உள்ளதா என்றால் உள்ளது. TN 52 Y 9992 மகேந்திரா அல்பா . கார் என் மனைவியின் பெயரில் உள்ளது. எதிரியை 10 வருடமாக தெரியும் என்றால் 30 வருடங்களாக தெரியும். எதிரி 1988 ல் மேட்டூர் தெர்மலில் வேலையில் சேரும்போதே தெரியும். எதிரி எத்தனை ஆண்டுகாலமாக மேட்டூரில் வேலை செய்தார் என்றால் 1998 ல் வேறு ஊருக்கு மாறுதல் ஆகி பின்னிட்டு மீண்டும் 2017 ல் மேட்டூரில் வந்து வேலைக்கு சேர்ந்தார். 2019 ல் தெர்மலில் இருந்து work shop ற்கு மாறினார். 2021 ல் விருப்ப ஓய்வு பெற்றார். 1998 ல் இருந்து 2017 இடைப்பட்ட காலத்தில் எதிரி எங்கு வேலை செய்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வெளிநாட்டிற்கு சென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார். கடைசியாக மேட்டுபாளையத்திலிருந்து மீண்டும் மேட்டூருக்கு வந்ததாக என்னிடம் சொன்னார். எத்தனை மணிக்கு என்னிடம் எதிரி பணம் வாங்கினார் என்றால் காலை 10.00 மணியிருக்கும். எத்தனை ரூபாய் வட்டிக்கு எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றால் 5 ரூபாய் வட்டிக்குத்தான் பணம் வாங்கினார். வட்டி எத்தனை மாதங்களுக்கு

கொடுத்தார் என்றால் இரண்டு மாதத்தில் திருப்பி கொடுப்பதாக கூறிவிட்டு வட்டியையும் தரவில்லை, அசலையும் தரவில்லை.

**மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**